அனுப்புநர்: நாள்:- 24-7-2010

C. செல்வராஜ்
55, இரயில்வே பார்டர் ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033

பெறுநர்:

செயலர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (OP) துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 9

அய்யா,

பொருள்:- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 - தேதி வாரியாக இச் சட்டத்தை அமல் செய்த தகவல் மறுக்கப்பட்டது - திரு. சி. தங்கவேலு, சார்புச் செயலாளர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக

பார்வை:- 1. தமிழக தகவல் ஆணைய வழக்கு எண் 1003380/01/10 நாள் 1.7.2010
2. ஆதிதிராவிடர் நலத் துறை மடல் எண் 13051/OP1/2010-1 நாள் 16.7.2010

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4 மற்றும் 5 னை அமல் படுத்திய விவரத்தை தேதி வாரியாக வெளியிடப்பட்டதா என்ற தகவல் 20.10.09 ல் கேட்கப் பட்டது. ஆனால் முறையான தகவல் வராமையால் மேல் முறையீடு செய்து அதற்கும் தகவல் கிடைக்காமையால் இரண்டாம் மேல் முறையீடு தகவல் ஆணையகத்திற்கு 8.2.10 அன்று செய்யப் பட்டது.

ஆணையகத்தி-ருந்து பார்வை ஒன்றின்படி தகவல் கொடுக்கச் சொல்- பணித்தும், போதுமான தகவல் கிடைக்கவில்லை. பார்வை இரணடில் கொடுத்துள்ள தகவல் ஏற்கனவே உங்கள் அலுவலகத்தி-ருந்து மடல் எண் 315/RTI/OP1/09-1 நாள் 16.11.2009 கிடைத்துள்ளது. அது கேட்கபட்ட தகவலுக்கு முழுமையானதாக இல்லை என்றுதான் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இத்துறையின் அரசு சார்புச் செயலர் திரு. சி. தங்கவேலு அவர்கள் பார்வை இரண்டில் அனுப்பிய மட-ல் நான் கேட்டுள்ள தகவல்கள் தேவைப்பட்டால் ரூ 150/- பொது தகவல் அதிகாரி பெயருக்கு வரைவு கேட்போலை அனுப்புமாறு கேட்டுள்ளார்.

இச்சட்டப் பிரிவு 7(6) ன் படி தகவல்களை அளிப்பதில் வகுத்துரைக்கப்பட்டிருக்கும் காலக் கெடுவை கடைப்பிடிக்க வில்லையானால், தகவல் கோரியவருக்கு அத்தகவல், இலவசமாகத் தரப்பட வேண்டும் என்ற விதி முறை இவருக்குத் தெரியாதா? வரைவு கேட்போலை பொது தகவல் அதிகாரியின் பெயருக்கு எடுக்கக் கூடாது என்பதும் தெரியாதா? அல்லது தெரிந்தும், இச் சட்டத்தை மதிக்க கூடாது என்ற எண்ணத்தில்,

இச்சட்டத்திற்கும், தகவல் ஆணையத்திற்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டிருக்கிறாரா? . மேலும் மனுதாரர் என்ன கோரியுள்ளார் என்பதை தெரிந்துகொள்ள முயற்ச்சிக்காமலேயே செயல்பட்டிருப்பது அவரது பொறுப்பின்மையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

மேலும் தகவல் கேட்டு 30 தினங்களை கடந்த பிறகு இலவசமாக தகவல்கள் வழங்க வேண்டும் என்பதை, பாமர மக்களே அறிந்து கொண்ட நிலையில் அரசின் தலைமைச் செயலகத்திலுள்ள ஒரு சார்புச் செயலர் இவ்வாறு தகவல் கொடுப்பது அவரது ஒழுங்கீனத்தை காட்டுவதாக உள்ளது. இம்மாதிரி சார்புச் செயலர், பொது தகவல் அதிகாரியாக இருந்தால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ல் மனுச் செய்யும் மக்களுக்கு எப்படி தகவல் கிடைக்கும் என்பதை எண்ணும் போது அரசின் செயல்பாட்டில் உள்ள வெளிப்படைத் தன்மை கேள்விக்குறியாகி உள்ளது.

20.10.09 ல் கொடுத்த தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவுக்கு இன்று வரை உரிய முறையில் தகவல் கொடுக்க தெரியாத, கொடுக்க இயலாத, சட்டத்தை, ஆணையத்தை மதிக்காத இச் சார்புச் செயலரை கொண்டு எவ்வாறு இத்துறை இயங்குகிறது என்பது மிகவும் வியப்பான ஒன்று.

ஆகையால் இவ்வாறு முரண்பாடாகவும் சட்டத்தை உதாசீனப் படுத்தியும் செயல்படும் சார்புச் செயலர் திரு. சி. தங்கவேலு மீது தக்க நடவடிக்கை எடுத்து, தகவல் உரிமைச் சட்டத்தை மதிக்கும் தன்மையையும் மனப்பான்மையையும் உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

C. செல்வராஜ்

நகல் : சட்ட பிரிவு 4 மற்றும் 5 ன் படி முறையான தகவல்
மறுக்கபட்டிருப்பது தொடர்பாக, அரசின்
அனைத்து துறை செயலாளர்களுக்கும் தகவலுக்காகவும்
உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.